(L)
பொதுசன
12-1991

பாதுகாவலன்

PATHUKAVALAN

உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை, பூவுலகில் நன்மனத்தோர்க்கு அமைதி.

சென்னைகேளி திரு நூலகம்

இங்கிதமே! இளஞ்சுடரே!
இன்னமுதே! எங்களது
பங்கமெல்லாம், போக்கிடவே,
பாலகனாய் வந்திடுவீர்!

ஞான ஒளி வீசிவரும்
நந்தவனப் பூஞ்சுடரே!
தானவழி சிறந்திருக்க
தண்ணளியாய் வந்திடுவீர்!

நத்தார் ★ புத்தாண்டு

நல் வாழ்த்துக்கள்

மலர்: 117 சிறப்பிதழ்: விலை 7/- இதழ்: 23-24

இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு



ஒளி:	5	எம் விழிகளின் ஒளி யேசு
கூர்:	5	எம் வாழ்வின் வழி யேசு

அன்புக் கண்மணிகாள்!

போர் மேகத்தினூடே ஒரு பொன்னொளியை நாடி எம் மனங்கள் ஏங்கித்தவிக்கின்றன.

"அன்பின் வடிவம், அருளின் சுனை
ஏழ்மையின் உரு, எளிமையின் உளீர்" என்று நாம் வாயாரப் புகழ்ந்து ஏற்றும் குழந்தை யேசுவின் உதயவிழாவை எப்படி நீங்கள் எதிர்கொள்ள இருக்கிறீர்களோ! நான் அறியேன். ஒவ்வொருவரின் நினைவுகளும் அமைதியைத்தேடி நாடி நிற்கின்றது என்பதுதான் உண்மை.

"அஞ்சாதீர்; மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா. குழந்தை ஒன்றைத் துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தி இருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அறிகுறியாகும்" (லூக். 2:10-13) என்று அன்று வானதூதர் சமக் காவல் காத்த இடையர்களுக்குக் கூறிய வார்த்தையை எங்கள் உள்ளத்தில் ஏற்று முன்னிட்டியில் கிடக்கும் குழந்தை யேசுவைக் காண்போம், கவலையை மறப்போம்.

அன்பின் அன்பு விழி.

மன்னவனாய் பிறந்திடுவாய்

மன்னவனாய் வந்திடுவாய் நீ
மானிடரை மீட்டிடுவாய்
காரிருளைப் போக்கிடவே
ஒளிச்சுடராய் வந்திடுவாய்

மனுக்குலத்தின் மணிவிளக்கே
பாவிகளின் சுடர் விளக்கே
மானிடரின் கறை போக்க
மீட்பனாய் நீ வந்திடுவாய்

அகதிகளின் அணைகரமே
அல்லல் படுவோரின் ஆதரவே
இன்னலை போக்கிடவே
இன்பமுடன் வந்திடுவாய்

சூ. அன்ரன் றொசாந்தன் அங். எண் 194

பாரில் வந்த பாலன் யேசு

ஆதிப்பெற்றோர் செய்தபாவம் கண்டார் எம்கடவுள்
பாரிலே இரட்சகர் உதிப்பார் என்றுரைத்தார்.
இத்திட்டம் நிறைவேற தெரிந்தெடுத்தார் குலமொன்றை
உருவாக்கினார் அக்குலத்தை தம் திருமகனின் வருகைக்காக.

உருவாக்கிய அக்குலத்தில் உருவானார் மாபரன் யேசு
பாவம் போக்கும் பாலன்யேசு மனுவானார் மாடைடைகுடிலிலே
இவ்வுலகில் வந்துதித்த இறைமகனை இடையர் முதல்காண
இறைதூதர்கள் இயம்பினரே இச்செய்தியை அவர்களுக்கு
மூவகை காணிக்கையுடன் மூவேந்தர் முன்னின்றனர்.

கயவரசன் ஏரோதின் கடுமைமிகு உள்ளத்தாலே
கள்ளமில்லா உள்ளம்கொண்ட பச்சிளங்குழந்தைகள் மாண்டன.
திட்டங்கள் நிறைவேற எம்பிரான் யேசு
எம்முடைய பாவம் போக்க தூதர் மூலம் உயிர் பிழைத்தார்.

S. றொபேட்சன் யூட் அங். எண். A 23

திருத்தந்தையின் 1-1-1992
உலக சமாதான தினத்திற்கான செய்தி

1967ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் பாப்பு ஆறாம் சின்னப்பர் சமாதானத்தை உண்மையில் விரும்புவோர் அனைவரையும் ஆண்டு தோறும் "சமாதானத்தின் அடிப்படை நன்மை"யைப் பற்றிச் சிந்திக்குமாறு அழைத்தார்.

இருபத்தைந்து ஆண்டுகளின் பின்னர் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் இந்த வருடாந்த சிந்தனையின் கால வரம்பற்ற தன்மையை வலியுறுத்த விரும்புகிறார். அவர் 1992ஆம் ஆண்டுக்கான தமது செய்தியின் கருத்தாக "சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் ஒன்றுபட்டுள்ள விசுவாசிகள்" என்னும் தலைப்பைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

சமயத்துக்கும், சமாதானத்துக்கும் இடையிலான பிணைப்பு சமுதாயத்தின் பொதுத்துறை, அரசியற்துறை இரண்டினதும் அமைப்பாண்மையைச் சார்ந்ததாகும். ஆகவே இது அனைவரின் கருத்துக்கும் உரியதாகும். உலகின் அநேக பாகங்களில் சமய நம்பிக்கை பொதுவாக சமூகத்தின் அமைதியான அபிவிருத்திக்குத் துணைபுரிந்துள்ளது. ஆயினும் வேறு பல இடங்களில் மக்களிடையே பதட்ட நிலைக்கும், வெளிப்படையான போராட்டங்களுக்குத் தன்னும் காரணமாயிருந்திருக்கிறது. அல்லது அது சூழ்ச்சித்திறத்துடன் கையாளப்பட்டு, குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. சகல சமயங்களும் சமாதானத்தில் நம்பிக்கை கொண்டு பிறரன்பை பற்றுறுதியுடன் மேற்கொள்கின்றனவென்றால், எத்தனையோ தடவைகளில் மக்களைப் பிளவுபடுத்தி ஒருவருக்கொருவரைப் பகையாக்குவதற்கும், சமுதாய வாழ்வின் அமைப்பிற்கே தீங்கிழைத்து நாடுகளுக்கிடையேயுள்ள உறவுகளைச் சீர்குலைப்பதற்கும் அது பயன்படுத்தப்படுவது எவ்வாறு சாத்தியமாகும். சமயம் சமாதானத்திற்களிக்கும் உண்மையான பங்களிப்பு என்ன? அதன் அடிப்படை நிபந்தனைகள் எவை? "சமாதானம்" என்னும் குறிக்கோளை மிகச் சிறந்த முறையில் அடைந்து கொள்வதற்கு சமயம் எவ்வாறு துணைபுரியக் கூடும்?

நேர்மையான உள்ளத்துடன் சமாதானத்தைத் தேடுவோரை இந்த முக்கிய விடயத்தைப் பற்றித் தம்மோடு சிந்திக்குமாறு திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் அழைக்கின்றார். விசேஷமாக, உண்மையான சமாதானம் எப்போதும் இறைவனுடைய ஒரு கொடை, அது செபத்தில் கேட்கப்படவேண்டும். அத்துடன் சமாதானத்திற்காக உருப்படியான செயற்பாடும் இருக்க வேண்டும். 1968 தமது முதல் உலக சமாதான தினச் செய்தியில் பாப்பு 6ஆம் சின்னப்பர் கூறியதுபோல "இது கிறிஸ்தவ சமயத்தில் இயல்பாயமைந்த ஒன்று. ஏனெனில் கிறிஸ்தவன் சமாதானத்தை அறிவிப்பது யேசுக்கிறிஸ்துவையே அறிவிப்பதாகும்." "அவரே எமது சமாதானம்" (எபே. 2 14), அவரது நற்செய்தி சமாதானத்தின் நற்செய்தியாகும். (எபே. 6:15)

அதேவேளையில், தமது சமயங்களின் ஆரோக்கியமான மூலப் பண்புகளிற் காணப்படும் சமாதான சக்திகளை ஒன்று திரட்டி, பிளவுகள் போர்களுக்காகவன்றி, சர்வதேச சமூகத்தின் உண்மை நலனுக்காக அவற்றைப் பயன்படுத்தும்படி பிறசமயத்தவரை வற்புறுத்துகிறார். இறுதியாக, சமாதானத்துக்குத் தேவையான ஆன்மீக, அறவியல், சமூக நிலைமைகளை உருவாக்குவதில் ஒத்துழைக்குமாறு அவர் கிறிஸ்தவர்களையும், மத நம்பிக்கையுள்ள அனைவரையும் ஊக்குவிக்கின்றார்.

மத நம்பிக்கையுள்ளவர்கள் மட்டுமே சமாதானத்திற்காகச் செய்யக்கூடிய அத்தியாவசியமான ஒரு பங்களிப்பு சமாதானத்துக்காக செபிப்பதாகும். சமாதானத்துக்கான உலக செபதினத்துக்காக அசிசி நகரில் கூடியிருந்த உலக சமயங்களின் பிரதிநிதிகளுக்கு திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் கூறியதுபோல "சமாதானத்திற்கான பெரும் போராட்டத்தில், பலதரப்பட்ட தன்மைகளையுடைய மனுக்குலமானது, தனது மனச்சாட்சி எங்கே உருவாக்கப்படுகின்றதோ, எந்த அடித்தளத்தின் மீது சகலமக்களினதும் அறமுறையான செயற்பாடு அமைக்கப்பட்டுள்ளதோ அந்த மிக ஆழமான உயிரூட்டமுள்ள மூலகங்களிலிருந்து ஊட்டம் பெறவேண்டும்" என்னும் உண்மைக்கு அத்தகைய செபம் சான்று பகர்கின்றது. எல்லா மக்களிடையிலும் சமாதானம் ஏற்பட வேண்டுமென்று, தமது இதயத்தின் ஆழத்தில் சமாதானத்துக்காகச் செபிப்பவர்கள் அதில் ஈடுபாடற்றவர்களாக இருக்கமுடியாது.

வரலாற்றினூடு நத்தார்

உலகில் உள்ள அனைத்திற்கும் வரலாறு உண்டு. விசேடமாக மனித குலத்திற்கு ஒரு பெரும் வரலாறு உண்டு. அது போலவே அவன் கொண்டாடுகின்ற நினைவு கூருகின்ற விழாக்களுக்கும் வரலாறுகள் உண்டு. இன்று மனிதன் கொண்டாடுகின்ற விழாக்கள் பல நீண்ட சரித்திரத்தைக் கொண்டவை. இதை இன்று வாழுகின்ற மனிதன் நினைப்பதுமில்லை, அதைப் புரட்டிப் பார்க்க முயல்வதுமில்லை. ஒரு சம்பவத்தையோ, விழாவையோ அல்லது எதை எடுத்தாலோ, அதை அதன் சரித்திரத்துடனே, அதனது ஆரம்ப விளங்கங்களுடனே தொடர்பு படுத்திப் பார்க்கும்போது தான் அது பூரணத்துவம் பெறுகின்றது; கூடிய கருத்தையும் தருகிறது.

உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவராலும் நினைவுகூரப்படும் மிகவும் முக்கியமான விழாக்களில் ஒன்று நத்தார்– கிறிஸ்து பிறப்பு (கிறிஸ்மஸ்) விழாவாகும். இது மார்கழி மாதம் 25ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இது முக்கியமாக ஆன்மீக, சமய சம்பந்தமான விழாவாக இருந்தாலும் உலகெங்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் ஒரு கொண்டாட்டமாகவும் அமைகிறது.

''கிறிஸ்மஸ்'' என்ற சொல்லானது 'கிறிஸ்துவின் பலி' என்னும் கருத்தைத்தரும் ஆங்கிலச்சொல்லிலிருந்து (Christ's Mass) பெறப்பட்டது. இச் சொல்லானது முதன் முதலாக 11ஆம் நூற்றாண்டிலே பாவிக்கப்பட்டது. ஜேர்மன் மொழியிலே 'புனித இரவு' என்னும் கருத்துப்படும் ஒரு சொல்லால் குறிக்கப்பட்டது. இவ்வாறு பல மொழிகளிலும், பல சொற்களாலும் இவ்விழா குறிக்கப்பட்டு வந்தது.



''கிறிஸ்மஸ்'' விழாக் கொண்டாட்டம் எப்போது ஆரம்பமானது என்பது பற்றிய சரியான, நம்பகமான தகவல்கள் காணப்படவில்லை. எனினும் 'தெலெஸ்போருஸ்' இனுடைய காலத்திலே (கி. பி. 138–161) இது மலர்ந்ததாக சில குறிப்புகளில் காணக்கிடக்கின்றது. இன்னும் 'கொம்மோடஸ்' மன்னனுடைய ஆட்சிக்காலத்திலே தான் (கி. பி. 180–192) இவ் விழா கொண்டாடப்பட்டதாக முதன்முதலாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பல எண்ணிக்கையுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் சமயத்தின் ஸ்தாபகரின் பிறப்பு நாளை- கிறிஸ்துவின் பிறப்பு நாளை கொண்டாடுவதற்காக கூடியிருக்கின்றார்கள்என்பதை 'டயக்கிளேசியன்' அறிய வந்ததும் உடனடியாக அவர்கள் அனைவரையும் தீயிலிட்டு அழித்தான் என்று பல சான்றுகள் கூறுகின்றன. கி. பி. 200ஆம் ஆண்டளவில் எகிப்து நாட்டில் இந்த விழா இருந்ததாக அலெக்சான்றியா கிளமென்ற் தனது நூல்களில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இவ்விழா பல்வேறு பட்ட பிரதேசங்களில், வேறு பட்ட திகதிகளில் கடைப்பிடிக்கப்பட்டதற்கான சான்றுகளும் உள்ளன. உதாரணமாக, சில இடங்களில் இவ்விழா வைகாசி மாதத்திலும், சில இடங்களில் தைமாதத்திலும், வேறு இடங்களில் தைமாதம் 6ஆம் திகதி ஆண்டவரின் திருக்காட்சி விழாவின்போது கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஏறத்தாழ கி. பி. 320ஆம் அல்லது 353ஆம் ஆண்டளவில் கொன்ஸ்தாந்தீன் ஆட்சியின் போதுதான் உரோமையத் திருச்சபை மார்கழி மாதம் 25ஆம் திகதியை கிறிஸ்து பிறப்பு விழாவின் நாளாக பிரகடனப்படுத்தியது. அத்துடன் கி. பி. 440இலே உரோமையப் பாப்பரசனவர் வெளியிட்ட அறிக்கையில் கிறிஸ்மஸ் இந்த நாளிலேதான் கொண்டாடப்படவேண்டும்என்று அறிவுறுத்தினார். 4ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலேயிருந்துதான் முழுக்கிறிஸ்தவ உலகமும் கிறிஸ்மஸ் விழாவை இந்த நாளிலே கொண்டாடி வந்தது. ஆனால், கிழக்கு உலகத் திருச்சபைகளில் மாத்திரம் தை மாதம் 6ஆம் திகதி இவ்விழா கொண்டாடப்பட்டு வந்தது.

நற்செய்தி ஏடுகளின் சான்றுகளிலிருந்தோ அல்லது நம்பத்தகுந்த பாரம்பரியங்களிலிருந்தோ கிறிஸ்து பிறந்த சரியான திகதியை நிர்ணயிப்பது, உறுதி செய்வது சாத்தியமற்றதும், கடினமானதுமான பணியாகும். மார்கழி மாதம் யூதேயாவின் மழைகாலம் என்பதால் இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் திகதியில், நாம் கிறிஸ்மஸ் கொண்டாடும் தினத்தில்தான் யேசு பிறந்திருப்பார் என்பதற்கு எதுவித சாத்தியக் கூறுகளும் இல்லை. ஆனால் இந்த நாளின் தெரிவிற்குக் காரணம் அன்று வாழ்ந்த மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பொதுவான நம்பிக்கைகளும், பண்டிகைகளுமாகும். விசேடமாக உரோமையர்களின் சூரிய தெய்வத்தின் விழாவே நத்தாரின் முன்னோடி விழாவாகும். ஜரோப்பாக்கண்டத்திலே மார்கழிமாத நடுப்பகுதியிலே இயற்கையில் காலநிலையில் ஒரு மாற்றம் ஏற்படுகின்றது. அதாவது பனிகாலம் முடிந்து பசுமையான காலம் ஆரம்பமாகின்றது. எனவே பனித்துக்கத்தின் இறப்பிற்குப் பின்னர் உயிரோட்டமும், செயற்பாடுகளும் நிறைந்த ஒரு பசுமையான, புத்துயிர்ப்பின் காலத்திற்குள் நுழைவதற்காக அனைத்துப் பொருட்களும் தங்களை ஆயத்தம் செய்து கொண்டிருந்தன. இப்படியான ஒரு நம்பிக்கைதான் பொதுவான எல்லாத்தேசங்களிலும் இருந்துவந்தது. விசேடமாக புற இன மக்கள் மத்தியில் இது அதிகமாக இருந்துவந்தது. இவர்கள் மார்கழிமாதம் 22-ம் திகதியை இயற்கையில் புதிய ஒரு ஆண்டின் பிறப்பாக கொண்டாடி வந்தார்கள். இது வடக்கு ஜரோப்பாவிலும் கூட கொண்டாடப்பட்டு வந்ததாக வரலாறு கூறுகின்றது. அத்துடன் உரோமையர்கள் இதனை சூரிய தெய்வத்தின் விழாவாக கொண்டாடினார்கள். இவர்கள் இவ்விழாவை மார்கழி மாதம் 25 ஆம் திகதி கொண்டாடி வந்ததாக பல சான்றுகள் கூறுகின்றன.

இவற்றையெல்லாம் கவனத்திற்கொண்டு, இவை அக்காலத்தில் அவர்களுக்கு கொடுத்த கருத்துக்களையும், அடையாளங்களையும், குறியீடுகளையும் பயன்படுத்தி கிறிஸ்துவின் பிறப்பு விழா பதிலீடு செய்யப்படுகிறது. கிறிஸ்துவின் பிறப்பு ஒரு புதிய ஆண்டின் பிறப்பாக மாறியது. உலகம் அனைத்தும் தூக்கத்திலிருந்து விழித்து, சாவிலிருந்து உயிர்பெற்று, இருளகற்றி ஒளியேற்றி, பாவமகற்றி அருள்வாழ்வை, உயிருள்ள பசுமையான வாழ்வைத் தருவதற்காக யேசு பிறந்தார் என்ற கருத்தையும் உண்மையையும் கூறும் வகையில் கிறிஸ்துவின் பிறப்பு விழாவானது மாற்றீடு செய்யப்படுகின்றது. எனவே புற இன மக்களின் கலாச்சாரங்கள் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் ஒரு பகுதியாக கலந்தது.

திருச்சபையானது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புறஇன மக்களின் தனியான உலகளாவிய கொண்டாட்டங்களை மாற்றி கிறிஸ்துவுக்கு ஆராதனை செலுத்தும் ஆன்மீக ஈடேற்றத்தின் விழாவாக ஏற்படுத்தியது. புனித சிப்பிரியான், புனித ஜோண் கிறிசோஸ்ரம் ஆகிய இருவரும் தங்களது எழுத்துக்களில் இக் கருத்துக்களுக்கு உயிர்கொடுக்கின்றார்கள்.

கு. ஜோண் லொறற்.

இவ்வாறு மாற்றமடைந்த கிறிஸ்துவின் பிறப்பு விழாவானது வரலாற்றின் மத்திய காலப்பகுதியிலே மிகவும் பிரபல்யமடைவதைக் காணலாம். இது முழுக்கிறிஸ்தவ நாடுகளிலும் ஆலயங்கள், வீடுகள் எங்குமே மிகவும் சிறப்பாகவும் கோலாகலமாகவும், கிறிஸ்தவ பக்தியுடனும் கொண்டாடப்பட்டு வந்தது. மறுமலர்ச்சிக்காலத்திலே 'தூய்மைவாதிகளால்' நத்தாரின் போதான ஆடம்பரக்கொண்டாட்டங்கள் கண்டிக்கப்பட்டன. மக்கள் மீது திணிக்கப்பட்ட அடக்குமுறை காரணமாக கொண்டாட்டங்கள் அர்த்தமற்றவை எனக் கருதியவர்கள் 1642 – 1652 வரையான ஆண்டுகளில் கொண்டாட்டங்களைத் தடைசெய்யும் விதிமுறைகளை கொண்டுவந்தனர்.

இவ்வாறாக வரலாற்றினூடு வளர்ந்து வந்த நத்தார் பண்டிகை இன்று உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் கொண்டாடும் பெரும் விழாவாகப் பரிணமித்துள்ளது. கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாமல் உலகம் முழுதுமே இக்காலத்தின் மகிழ்ச்சியில் திளைக்கிறது. நத்தார் தினத்தன்று பரிசுப் பொருட்கள் பரிமாறுவதும், வாழ்த்துமடல்கள் அனுப்புவதும், நத்தார் மரம் அலங்கரிப்பதும் இன்று உலகில்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

கிறிஸ்மஸ் குடில்-அதன் வரலாறும் அது தரும் செய்திகளும்

"கிறிஸ்மஸ் குடில்" இயேசுவின் பிறப்புக் கொண்டாட்டத்தில் முக்கிய இடம் பெறும் ஓர் அடையாளம். எல்லாக் கத்தோலிக்கத் தேவாலயங்களிலும், வீடுகளிலும், கிறிஸ்மஸ் காலத்தில் இதற்கு முக்கிய இடம் உண்டு. இயேசு குழந்தையாகப பிறந்த இடம், அதன் சுற்றாடல் போன்றவற்றை நினைவூட்டுவதற்காக கிறிஸ்மஸ் நள்ளிரவு தொடக்கம், திருக்காட்சி விழாவரை இக்கிறிஸ்மஸ் குடில் வீடுகளிலும், தேவாலயங்களிலும் முக்கியமான ஒரு கவர்ச்சிப் பொருளாக வைக்கப்பட்டிருக்கும். பாலர்முதல் பாட்டன்மார் வரை இதன் அலங்காரத்தில் ஆர்வமாக ஈடுபட்டிருப்பார்கள்.

இந்த வழக்கம் எப்போது தோன்றியது?

இயேசு பிறந்ததாகக் கருதப்பட்ட பெத்லேகேமின் குகையை வழிபாட்டிற்குரிய ஒரு இடமாக கிறிஸ்தவத்தின் முதல் நூற்றாண்டுகளில் இருந்தே கருதி வந்துள்ளார்கள். சக்கரவர்த்தி கொன்ஸ்ரன்ரைனின் தாயாரான எலேனம்மாள், 4 ஆம் நூற்றாண்டிலே இயேசு பிறந்ததாகக் கருதப்பட்ட அந்த பெத்லேகேம் தொழுவத்தை ஒரு ஆலயமாக மாற்றியமைத்தாள் என்று கூறப்படுகிறது. இயேசு மிருகங்கள் அடைக்கப்படுகிற, அல்லது அவற்றுக்குரிய உணவு சேமிக்கப்படுகிற ஓர் குகை அல்லது கொட்டிலிலே பிறந்தார் என்று பாரம்பரியம் கூறுவதற்கேற்ப நாம் கிறிஸ்மஸ் குடில் வைக்கும் வழக்கத்தைக் கடைப்பிடிக்கிறோம். புனித பூமியான பலஸ்தீனாவிலே நிகழ்த்தப்பட்ட அகழ்வுவேலைகளும், தொல்பொருள் ஆராட்சிகளும் இப் பாரம்பரியத்தை ஐயந்திரிபற உறுதிப்படுத்தியுள்ளன.

உண்மையில், தற்காலத்தைப்போல கிறிஸ்மஸ்குடில் வைக்கும் வழக்கம் 13 ஆம் நூற்றாண்டில் புனித பிரான்சிஸ் அசிசியாரின் காலத்தில் இருந்தே பிரபல்யமாகி வருகிறது. புனித பிரான்சிஸ் அசிசியார், இத்தாலியில் கிறேச்சோ எனும் இடத்தில் இந்த வழக்கத்தை 1223 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்திற்கு முதல் நாள் மாலையில் செய்து காட்டினார் இது உண்மை மனிதர்களையும், விலங்குகளையும், ஒரு பெரிய தொழுவத்தையும் கொண்டதாக அமைந்தது.

பிரான்சிஸ் அசிசியாரின் இந்த அடையாளச் செய்கை காலப்போக்கில் மேலும் குறுகி இடையர், மூவரசர், விலங்குகள், தேவதாய், சூசையப்பர், வானதூதன், குழந்தை இயேசு போன்றோரின் உருவங்களையும், ஒரு சிறிய குடிலையும் கொண்டு வடிவமைப்பதாக மாறிவிட்டது.

எப்படி இந்த வழக்கம் வந்தது?

இயேசு விலங்குகளின் குடிலில் பிறந்தார் என்று எந்த நற்செய்தி நூலிலும் திட்டவட்டமாக இல்லை. இயேசுவின் பாலத்துவம் பற்றிஎழுதிய மத்தேயு, லூக்காஸ் நற்செய்திகளிலும் இயேசு பிறந்த இடம் (குகை அல்லது குடில்) பற்றி வெளிப்படையாகக் கூறப்படவில்லை. மத்தேயு, 2 : 11a இல் கூறப்பட்டபடி, ஞானிகள் 'வீட்டிற்குள் போய், பிள்ளையை அதன் தாய் மரியாளுடன் கண்டு, தெண்டனிட்டு வணங்கினர்.' லூக்காஸ், 2 : 7, 12, 16 ஆகிய பகுதிகளில் கூறப்பட்டபடி, பிறந்த பாலன் இயேசு முன்னிட்டியில் கிடத்தப்பட்டார். "அவள் தலைப்பேறான மகனை ஈன்றெடுத்து, துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தினாள். ஏனெனில், சத்திரத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை." (லூக். 2 : 7)

இதிலே கூறப்பட்ட "முன்னிட்டி" என்பது மாடுகளுக்குத் தீனிவைக்கும் தொழுவம் அல்லது தொட்டி என்றும் கருதலாம். இதில் இருந்தே இயேசு விலங்குகளின் தொட்டிலில் பிறந்தார் என்ற பாரம்பரியத்திற்குஒரு நற்செய்தி ஆதாரமும் இருக்கிறது என்று கூறலாம்.

இசையாஸ், 1 : 3 வாக்கியத்தை அடிப்படையாக வைத்தும் இயேசுவிலங்குகளின் தொழுவில் பிறந்தார் என்பதை பாரம்பரியம் நிறுவமுயல்கிறது. அந்த வாக்கியம் வருமாறு: "எருது தன் உரிமையாளனை அறிந்து கொள்கிறது, கழுதை தன் தலைவனின் கொட்டகையைத் தெரிந்து கொள்கிறது." மேலும் இந்த வாக்கியத்தை அடிப்படையாக வைத்து, இயேசு பிறக்கும் போது ஒரு எருதும் ஒரு கழுதையும் அங்கே இருந்தன என்று, ஒருபடி மேலே சென்று விளக்க முயல்கிறது பாரம்பரியம்.

ஆகவே கிறிஸ்மஸ் குடில் வழக்கம் எப்படி உருவாயிற்று என்பதற்கு நற்செய்தி நூல்களில் உள்ள குறைவான தகவல்களும், பாரம்பரியம், அகழ்வுகள், தொல்பொருள் ஆய்வுகள் என்பவற்றினது கூடுதலான தகவல்களும் உதவுகின்றன.

"கிறிஸ்மஸ் குடில்" தரும் செய்தி.

கிறிஸ்மஸ் விழா தரும் செய்தியின் ஓர் அடையாளமே கிறிஸ்மஸ் குடிலாகும். இறைவன் இவ்வுலகின் வரலாற்றில் நுழைந்தார். வறுமையும், தீமையும், அநீதியும், அடிமைத்தனமும் நிறைந்த இவ்வுலகிற்கு மீட்பும், விடுதலையும் அளிக்க இறைவன் இவ்வுலகில் இறங்கினார் என்பதே கிறிஸ்மஸ் விழாதரும் செய்தியாகும். இந்த நற்செய்தியை ஓர் அடையாளம் மூலம், நிதர்சனமாக அழுத்திக் கூறுவது தான் இந்த கிறிஸ்மஸ் குடில்.

யோ. றோகான்

பிலிப்பியர் 2 : 6-7 பகுதியில் புனித சின்னப்பர் கிறிஸ்துவின் மனுவுரு ஏற்றல் பற்றித் தான் கொண்டிருந்த கருத்தை விளக்குகிறார். "ஆனால் தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் தன்மை பூண்டு மனிதருக்கு ஒப்பானார்," (பிலிப்பியர் 2 : 7)

கிறிஸ்து மனிதனானார் ஒரு பணக்கார அல்லது பகட்டான மனிதனாக அல்ல மாறாக ஒரு அடிமையாக, ஏழையாக, அகதியாக, எளியவர்களில் ஒருவனாகவந்துபிறந்தார். இயேசுவின் பிறப்பு, குழந்தைப்பருவம் பற்றிக்கூறும் மத்தேயு, லூக்காஸ் நற்செய்தி நூல்களும் இப்படியாகப் பிறந்த இயேசு வைத்தான் படம் பிடித்துக் காட்டுகின்றன. இந்தக் கருத்துக்களின் ஓர் அடையாளமே கிறிஸ்மஸ் குடில். விலங்குகளின் இருப்பிடத்திலே, விலங்குகளின் மத்தியில் இயேசு பிறந்தார். ஏழைகளான இடையர்களும், திறந்த மனத்துடன் இறைவனின் வழிகளை எதிர்பார்த்து ஏற்க ஆயத்தமாயிருந்த ஞானிகளுமே அவரது பிறப்பை அறிந்து அவரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றனர். இப்படி ஓர் இழிந்த மனிதனாக அவர் பிறந்தாலும் அவர் இறைமகன் ஆகவே தான் வானதூதர்கள் பாட்டுப் பாடி மகிழ்ந்தனர். வழிகாட்டும் விண்மீன் அவர் இருந்த இடத்தைச் சுட்டிக் காட்டிற்று, கிறிஸ்மஸ் குடிலும் அவற்றைச் சூழவுள்ள உருவங்களும் இக் கருத்துக்களை நிதர்சனமாக விளக்குகின்றன அல்லவா?

சிரி!! சிரி!!! சிரி!!!

ஹோட்டல் அறையிலேயே தண்ணீர் வசதி உண்டு என. விளம்பரம் செய்திருந்தனர். ஆனால் தண்ணீர் கூரையிலிருந்து விழும் என நான் எதிர் பார்க்கவில்லை.

★

'டார்லிங் உன்னைச் சுற்றி முழு உலகமுமே சுழலுது ...'

'ஓ ... நான் சொன்னேன் ... அந்த கடைசிக்கிளாசை குடிக்க வேண்டாம் என்று ...'

★

'எனக்கு கொஞ்சம் எலிப் பாஷாணம் தேவை'.

'அதை கட்டித் தரட்டுமா? அல்லது இங்கேயே இப்போ சாப்பிடப் போகிறீரா ...?'

★

'உன் நாய் ஏன் என்னை அப்படிப் பார்க்கிறது'

'ஒரு வேளை ... நீ அதன் கோப்பையில் சாப்பிடுவது காரணமாயிருக்கலாம் ...'

★

'இப்போ தளவாடங்கள் வியாபாரம் செய்கிறதாக கேள்விப்பட்டேன். எப்படி லாபம் வருகிறதா?'

'இதுவரை என் வீட்டுத் தளவாடங்களைத்தான் விற்றிருக்கிறேன்.'

ஒளி உதித்தது

அமைதியான அந்நேரத்தில் ஆலய மணி அன்றைய நத்தார்த் திருப்பலியை நினைவூட்டிவிட்டுச் சென்றது பரபரப்புடன் ஆலயம் செல்வதற்காக ஆயத்தமானார் டேவிட். அழுகையும், அவலங்களும், சோகங்களும் நிறைந்திருந்த அந்தக் கிராமத்திலே ஆடம்பரமாகக் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடுவதற்கும் ஓரிரு குடும்பங்கள் இருக்கவே செய்தன. அதிலும் ஆன்மீகம் அங்கே அடியோடு மறைந்து மரபு வழியான வீண் களியாட்டமே மேலோங்கி நின்றது.

கார்காலத்தின் கடுங்குளிரும், கடும்மழையும் அந்த நேரத்தில் எங்குமே பரந்திருந்தது. ஆலயம் செல்ல ஆயத்தமான டேவிட், மழை குறையும் மட்டும் சற்றுப் பொருத்திருந்தார். அப்பொழுது அவர் வீட்டில் அமைக்கப்பட்டிருந்த பாலன் குடிலின் மீது அவர் கவனம் சென்றது உடனே எழுந்து சென்று அந்தப் பாலன் குடிலை மேலும் அழகாக்குவதில் ஈடுபட்டார். ''நல்ல வடிவான சுருபம், நல்லா அமைஞ்சிருக்கு'' இது டேவிட்டின் மனைவி திரேசம்மாவின் விமர்சனம். ''நல்லாத்தானே இருக்க வேணும். எவ்வளவு காசு குடுத்து இத வாங்கினன் தெரியுமா? இந்த செற மட்டும் எழுநூற்றிஐம்பது ரூபா. இஞ்ச கொண்டு வந்த செலவு எல்லாஞ் சேத்து ஆயிரம்ரூபா முடிஞ்சது'' என்று தன்னுடைய பகுதியையும் கூறி முடித்தார் டேவிட்.

''அண்ணோய்..... அண்ணோய்'' கதவடியிலிருந்து யாரோ கொடுத்த குரல் அவர்கள் இருவரையும் திசை மாற்றியது. ''ஆரோ கூப்பிடுறாங்க, நான் போய்ப் பாத்திற்று வாறன்.'' என்று கூறி விட்டு படியில் இறங்கிய டேவிட்டின் கையைப் பிடித்து இழுத்து ''நீங்க ஏன் போறீங்க விருப்பமெண்டால் உள்ள வரட்டும்'' என்று கூறினாள் திரேசம்மா. ''அண்ணோய்... அண்ணோய்...'' மீண்டும் அந்தக்குரல். ஏக்கமும், துக்கமும் கலந்த யாரோ ஒருவரின் குரல்தான் அது என்பது தெளிவாகத் தெரிந்தது. ''ஆரது உள்ள வாங்க'' வீட்டினுள் நின்றவாறே குரல் கொடுத்தாள் திரேசம்மா.

மழையில் நனைந்து நடுங்கிக் கொண்டு மூன்று உருவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக உள்ளே நுழைகின்றன சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு மனிதன், அருகில் வயிற்றினுள்ளே குழந்தையைச் சுமந்தபடி அவள் மனைவி, அத்தோடு மூன்று வயது மதிக்கத்தக்க ஒரு பெண் குழந்தை. அவர்கள் இருந்த நிலைமை அவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள் என்ற உண்மையைத் தெளிவாகக் காட்டியது. ''அண்ண இண்டயோட நாங்க ஊரவிட்டு வெளிக்கிட்டு நாலு நாள் ஆச்சுது. எங்கட ஊருக்க ஆமிக்காரங்கள் வந்து வீடெல்லாம் எரிச்சுப் போட்டாங்க, அதோட கன ஆக்களையும் சுட்டுப் போட்டாங்க, நாங்க ஒரு மாதிரித் தப்பி இஞ்சாலப் பக்கம் வந்திற்றம். தயவு செய்து உங்கட வீட்டில தங்கிறதுக்கு இடம் தருவீங்களா? இந்த மழையில நாங்க ஒண்டும் செய்ய ஏலாது. இருட்டாயும் இருக்கு... ஒரு இடமும் போகவும் ஏலாது... ரா ஒரு பொழுதும் தங்கிறதுக்கு இடம் கொடுங்க.'' கெஞ்சும் குரலில் கேட்டான் அந்த மனிதன்.

அதற்குள் திரேசம்மா, ''தம்பி மன்னிக்கவேணும், எங்க வீட்ட இடமில்ல. எங்கட சொந்தக் காற ஆக்களெல்லாம் இப்ப பூச முடிய வருவாங்க. இன்னும் கொஞ்சத் தூரம் போனா ஒரு பள்ளிக் கூடம் இருக்கு. அதில நீங்க தங்கலாம்.'' என்றாள். ஆனால் அந்த மனிதன் விடவில்லை ''அம்மா என்ர மனுசி இருக்கிற நிலமயும் சரியில்ல, பிள்ள பிறக்கிறதுக்குரிய அறிகுறிகளெல்லாம் இருக்கு தெண்டு சொல்லுறா, தயவு செய்து இந்தக் கூர ஓதுக்கில எண்டாலும் தங்க வீட்டீங்க எண்டா பெரிய புண்ணியமா இருக்கும்.'' அவனுடைய கண்கள் நீரைச்சொரிந்தன. ஆனால் டேவிட்டினுடையவும் திரேசம்மாவினுடையவும் கனத்த உள்ளங்களில் இரக்கத்தின் சுவடு கூட ஏற்படவில்லை. ''கண்டவன் நிண்டவன் எல்லாம் வந்து தங்கிறதுக்கு நாங்க என்ன அகதிமுகாமா கட்டிவைச்சிருக்கிறம், கெதியா வெளியால போங்க.'' வார்த்தைகளை அள்ளி எறிந்தாள் திரேசம்மா. அது உண்மையில் ஏவப்படும் ஷெல்லை விடக் கொடுமையாகத்தான் இருந்தது. அங்கே அந்நியன் அடித்துத் துரத்தினான். இங்கே சொந்த இனம் உதைத்துத் தள்ளுகின்றது. மூவரும் அந்த இடத்தை விட்டு நகர்கின்றனர். விடுதலைக்காக சிந்தப்பட்டுக் கொண்டிருக்கும் இரத்தம் மாத்திரமல்ல, வாழ்வுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் ஏழைகளின் கண்ணீரும், சொந்த இனத்துள் இருந்து எழுகின்ற இரக்கமற்ற செயற்பாடுகளினால் உருவாக்கப்படும் கண்ணீரும் அந்தப் பூமியை நனைத்துக் கொண்டிருந்தது.

''நாங்க இப்பதான் வீடு எல்லாம் ஒரு மாதிரி ஒழுங்கு படுத்தி வைச்சிருக்கிறம், நாளைக்கு எத்தினபேர் வீட்ட வருவாங்க, இந்தச் சனியங்கள உள்ள விட்டா எல்லாத்தயும் ஊத்தையாக்கிற்றுப் போயிருங்கள்'' இப்படித் திரேசம்மாள் சொல்லி முடித்து ஓய்ந்தாள். ''சரி சரி கதவப் பூட்டிற்று வாரும், பூசைக்குப் போவம், மழ விடாது போல இருக்கு குடயப் பிடிச்சுக் கொண்டு போவம்'' என்று டேவிட் சொல்லவும் ஆயத்த மணி அடித்து ஓயவும் சரியாக இருந்தது.



ஆலயத்துள் இருவரும் அடியெடுத்து வைத்தனர். ஆனால் அவர்கள் அன்றைய வழிபாட்டில் பங்காளர்களாக அல்ல, பார்வையாளர்களாகவே இருந்தார்கள். பூசைமுடிவில் எல்லோரும் பாலன் குடிலை நோக்கிச் சென்று மெழுகுவர்த்திகளைக் கொழுத்துவதும், பணத்தையும், பொருட்களையும் காணிக்கையாகக் கொடுப்பதுமாக இருந்தனர். டேவிட் குடும்பமும் பழக்கப்பட்ட இந்த மரபு முறைக்கு விதிவிலக்கானதல்ல. அவரும் சென்று மெழுகுதிரி கொழுத்தி விட்டுத்திரும் புகையில் ''அம்மா ஏம்மா ஆண்டவர மாட்டுக் கொட்டிலில வைச்சிருக்கிறாங்க..... அவர் எந்தப் பெரிய ஆள். அவர நம்ம வீட்டுக்குக் கொண்டு போய் கட்டிலில வளத்துவமா'' என்று அங்கு நின்ற குழந்தை ஒன்று அதன் தாயைப்பார்த்துக் கேட்டது. ஆனால் அந்தத்தாயான வள் அந்தக்குழந்தையை அமைதியாய் இருக்கும்படி அதட்டினாள். ஆனால் டேவிட் ''தங்கச்சி அந்த நாளில, ஆண்டவன் இயேசு பிறந்த நேரம், அந்த ஊரில இருந்த ஆக்கள் தங்கட வீட்டில இயேசுட அம்மாவுக்கும், அப்பாவுக்கும் இடம் குடுக்கேல அதனாலதான் சூசையப்பரும் மரியாளும் மாட்டுக்கொட்டிலில தங்கினாங்க'' என்றார். ''ஐயோ பாவம் ஆண்டவருக்கு இடங் குடுக்கமாட்டனெண்டா சொன்னாங்க?' இது சிறுமியின் கேள்வி. ''ஆண்டவர் எண்டு தெரிஞ்சிருந்தா எல்லாரும போட்டிபோட்டுக் கொண்டு குடுத்திருப்பாங்க. ஆனா அவங்களுக்கு ஆண்டவர் எண்டு தெரியாதே'' தன்னையறியாமலேயே சின்னவயதில் கேட்டறிந்ததை அப்படியே சொல்லிமுடித்தார் டேவிட்.

கி. அந்தோனிதாஸ் டலிமா
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

இது 'உனக்கில்லடி உபதேசம் ஊருக்கடி கண்ணே' என்றதாக இருந்தது. ''ஆண்டவர் சொன்னார் தானே மற்ற ஆக்களுக்கு உதவி செய்தா அது தனக்கு செய்தது எண்டு'' சிறுமி கூறி முடியுமுன்னே அவள் தாய் குழந்தையைக் கூட்டிக் கொண்டு போய் விட்டாள்

எல்லாக் கடமைகளையும் முடித்துவிட்டு வீடடை நோக்கி விரைந்தனர் டேவிட்டும், திரேசம்மாவும். வீதிக்கரையிலே வானூர்திகளின் கோரப்பசிக்கு இலக்காகி இடிந்து கிடந்த அந்தக் கடைத் தொடரின் ஒரு பகுதியிலே ஒரு துண்டுப்பகுதி கீழே விழாமல் தொங்கிக் கொண்டிருந்தது அதன் கீழே மூன்று உருவங்கள். டேவிட்டினுடையவும், திரேசம்மாவினுடையவும் கண்களிலிருந்து இந்தக்காட்சி சப்பிப் போகவில்லை. அங்கு அவர்கள் கண்ட காட்சி இயேசுவின் பிறப்பு எப்படி அமைந்திருக்கும் என்பதைப்படம் பிடித்துக் காட்டுவதாக இருந்தது. சூசையும், மரியாளும் மாட்டுக் கொட்டிலே தஞ்சம் என்று அணுகினர். இயேசுவும் அங்கேதான் பிறந்தார். ஆம் இங்கும் அந்த உருக்குலைந்து கிடக்கும் கட்டடத்திலுள்ள ஒரு சிறிய கிழிந்த சாக்குத் துண்டின்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

விண்ணின் ஒளி மண்ணிலே

"நசரோக்" என்னும் சிற்றூர். அச்சிற்றூரிலேஓர் இல்லம். அந்த இல்லத்திலே இளமை கொழிக்கும் மங்கை நல்லாள் ஒருத்தி, அவள் பெயர் மரியாள்.

மாலை நேரம். முழந்தாளிட்டு இறைவனை இறைஞ்சி நிற்கிறாள் அம்மங்கை. அந்த நேரத்தில் ஒளிக்கதிர்கள் அவளைச் சூழ்ந்து வளைத்துக் கொள்கிறது. அவ்வொளியினூடே ஒரு வானதூதன் தோன்றி "அருள் நிறைந்த வளே வாழ்க" என வாழ்த்துகிறான். இறைவன் மனுவுருவெடுக்க அவளின் வயிற்றைத் தெரிந்தெடுத்த செய்தியை உரைக்கிறான். இறைவனின் சித்தத்திற்கு அடிபணிந்து "அப்படியே ஆகக்கடவது" எனப்பணிவோடுநவில்கிறாள். அத்தருணமே இறைவன் தூய ஆவியால் அவள் உதரத்தில் கலந்தார்.

நாட்கள் வாரங்களாக, வாரங்கள் திங்கள்களாக உருண்டன. யூதேயா நாட்டு மக்கள் அனைவரும் குடிக்கணக்கு கொடுக்க வேண்டும் என்று உரோமை மன்னன் ஆணையிடுகிறான் அவன் கட்டளை நாடு முழுவதும் பறை சாற்றப்படுகின்றது. நிறை மாதக் கர்ப்பவதியான மரியாளும், அவளது வாழ்க்கைத் துணைவரான சூசையும் பெத்லேகம் நோக்கிப் பயணமாகினர்.

மார்கழித் திங்களின் கடுங்குளிர். சில்லென்ற குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. பெத்லகேம் எனும் அச்சிற்றூர் திருவிழாக்கோலம் பூண்டு மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. மரியும், சூசையும் அன்றிரவைக் கழிக்க இடம் தேடினர். எவரும் அவர்களுக்கு இடமளிக்க முன்வரவில்லை. எங்கும் இடமின்றி மக்கள் ஒவ்வொரு இல்லத்திலும் குழுமியிருந்தனர். இறுதியில் சிற்றூரின் எல்லையிலே இருந்த மலையடிவாரத்தை அடைந்தனர்.

உலகம் இருளில் ஆழ்ந்திருந்தது. நடு இரவு, தண்மதியும் தண்ணொளி இழந்து உண்மை யொளி உதிக்கப்போவதைக் கண்டு அஞ்சி விண்ணில் தோன்றவில்லை, எனினும் உண்மை ஒளியின் வருகையை இவ்வுலகிற்கு அறிவிப்பது போன்று விண்மீன்கள் அங்கு மிங்கும் கண் சிமிட்டிக்கொண்டிருந்தன. இருளால் போர்த்தப்பட்ட அம்மலையடிவாரத்தில் செயற்கையில் அமைந்த மாட்டுத் தொழுவம் ஒன்றிருந்தது. அத்தொழுவத்தில் சிறிய அகல்விளக்கு ஒன்று தன் ஒளிக் கதிர்களால் அங்குள்ள உயிர்கட்கு உயிரளித்துக்கொண்டிருந்தது.

இருக்க இடம்தேடி அலைந்த மரியாளுக்கும், சூசைக்கும் அடைசகலம் தந்தது அத் தொழுவம். அத்தொழுவத்தில் தான் விண்ணையும் மண்ணையும் படைத்தவன், மக்களைப் படைத்தவன், மக்களுக்தரிய பகுத்தறிவினைப் படைத்தவன், மக்கள் புரிந்த பாவமெனும் குற்றத்திற்கும் பரிகாரம் தேட மனித உருக்கொண்டவன் உதித்தான். ஆம்! இறைவன் விண்ணினின்று மண்மீது மாபெரும் ஒளியுடைய குழந்தையாகத் தோன்றினான். உண்மை ஒளி ஒளிர இறைவனை இறைஞ்சி நின்ற மக்களுக்கு வழிகாட்ட வந்தது அப்பேரொளியுடைய அக்குழந்தை. தனது மானிட மீட்பின் அலுவலைத் தொடங்கி விட்ட அந்த விண்ணின் ஒளி இன்று மண்ணிலே...

அ. மோசேஸ் தேவரத்தினம்
"அமல அகம்"
தும்பளை, பருத்தித்துறை.

வாழ்த்தி மகிழ்வோம்

பண்டிகைக்காலம் வந்தால் வாழ்த்துமடல்களாலும், நேரில் வாழ்த்து கூறுவதாலும் மகிழ்வை பரிமாறிக்கொள்வது பலகால நடைமுறை சம்பவமாகிவிட்டது அதனை நாம் மணவிழாக்கள், பிறந்தநாள் விழாக்கள், சமய விழாக்கள் சந்திப்பு நிகழ்வுகளிலும் மேற்கத்திய முறையிலே கைகுலுக்கி, முத்தம் கொடுத்து எமது அன்பையும், சமாதானத்தையும் வாழ்த்தையும் பகிரும் போது மனதில் எழும் மகிழ்ச்சிகள் நல்லுறவுக்கு பாலமாக அமைகின்றன.

இவை இன்று சம்பிரதாயமாதவும், நடைமுறை சம்பவமாகவும் காத்துவர மட்டும் நாம் கடைப்பிடிக்கின்றோமா என்று சிந்திக்க தூண்டுகிறேன். எம் இடையே உள்ள பேதங்களை மறந்து ஒன்றிக்கவே திருப்பலியிலும் சமாதான பகிர்வை ஆலயத்துள்ளும் நேர்முகமாக செய்து வருகிறோம். இவை எம்மட்டில் எப்படி எவ்வாறு உணர்ந்து செயற்படுகிறோம்? எம் மனதில் எழும் பதில்கள் என்ன?

தலையாட்டும் பொம்மைகளாகவா? அல்லது அதிலும் கர்வத்தை காட்டி எதுவுமே கூறாது தெரியாதவர் போல, அன்றி கேலியாக அல்லது கருத்தறியாது தலை ஆட்டுவதால் தலை ஆட்டுகிறேன் என்ற மன உணர்வுடன் அல்லது கோவிலுக்குள் மட்டும் கௌரவத்திற்காக செய்கிறோமா அல்லது சவால் விடுகிறோமா? சமாதானம் சொல்கிறோமா?

இவற்றின் உள்ளர்த்தத்தை புரிந்துகொண்டால் பிறக்கும் புத்தாண்டில் நம் வாழ்த்தும் வார்த்தையும், வாழ்க்கையும் அர்த்தம் நிறைந்ததாக மனமகிழ்வும் நிரந்தரமாகவே கிடைக்கும். இல்லையேல் இவையே எம் அமைதிக்கு சவாலாகவும், சமாதானத்துக்கு சாவு மணி அடிப்பவையாகவும் மாறிவிடும்.

கருத்தறிந்து, பொருள் அறிந்து, தேவை அறிந்து, கிறிஸ்துவின் அன்பையும், சமாதானத்தையும் பகிரும் கருவிகளாக மற்றவர்களுக்கு முன் மாதிரிகளாக எமது வாழ்த்தும், வார்த்தையும், வாழ்க்கையும் இணைந்த புதிய வடிவில் புதிய வருடத்தை எதிர் கொண்டு சவால்களை வென்று சமாதானத்தை நிலைநிறுத்த ஒன்றுபட்டு வாழ்வோம், வளர்வோம், வாழவைப்போம் என வாழ்த்துவோம்.

நல்வாழ்த்துக்கள்

சூசை.

வரலாற்றினூடு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயிலப்பட்டு வரும் நடைமுறைகளாகும். இவ்விழாவை நாம் நினைவுகூரும்போது இவ்விழா இன்று பெற்றுள்ள உலகியல் சார்ந்த வெளி ஆடம்பரங்களுக்குள் மூழ்கிப் போகாது, அதன் அடிப்படை நோக்கங்களை நினைவுகூர்ந்து ஒளியின் விழாவாக, நம்பிக்கையின் விழாவாக, ஆன்மீக எழுச்சியின் விழாவாகக் கொண்டாடுவது அவசியமாகும்.

குருசுமுத்தண்ணையின் கிசுகிசு: 70

குருசுமுத்தண்ணை : எங்க அடைக்கலம் அலைஞ்சு திரிஞ்சு வாறாய்?

அடைக்கலம் : எங்கட கோயிலை விட்டு புதுசு புதுசா படலைக்கு ஒரு சபை தொடங்கிறாங்க. அது தான் பார்க்கப் போனா அங்க எல்லாம் புதுப் புது விளக்கம் சொல்லி எல்லோரையும் குளப்பி போடுறாங்க அண்ணே!

குருசு : ஏன் தம்பி! படலைக்கு ஒரு சபையும் பெயருக்கு ஒரு சோதனையுமாய் புற்றீசல் மாதிரி புறப்பட்டதுகளை கண்டு ஏமாறுகிறாய்? இதுகள் வரும் எண்டு அந்த நற்செய்தியவில இருக்குதானே! நீ இருக்கிறதில இருந்து திருத்திறதுக்கு மின்மினியளை நம்பி சூரியனை மறக்கலாமே!

அடைக்கலம் : இல்லையண்ணே? எங்கடயளிலையும் சில ஓட்ட ஒடிசல் தெரிஞ்சுது. அதுதான் பார்க்கப் போனேன். அங்க முகடே சரியில்லை. அது தான் ... ...

குருசு : அடைக்கலம் உன் வீடு ஒழுகினா அடைக்கிறதுக்கு வழியைப் பாக்கிறதை விட்டுட்டு எத்தனை நாளைக்கு எத்தனை குந்தில வாழப் போறாய்? சொந்த வீட்டை மேஞ்சு அந்த வீடைப் புனிதமாக்க வேணும். ஆற்றயும் குந்துகள் ஆறுதல் தராது பார்.

புனித பிரான்சீஸ்கன் சகோதரசபை அழைக்கிறது

இயேசுவின் நற்செய்தியினை எமது மண்ணிலே முதன் முதலாக வித்திட்ட புனித பிரான்சீஸ்கன் சபையில் இணைந்து பணியாற்ற விரும்புகிறீரா?

சேவைத்தளத்தில் பல பணிகள் காத்திருக்கிறது

அகதிகள், அனாதைகள், ஒதுக்கப்பட்டோர், நோயாளர் வறியவர் மத்தியில் நல் அறிவூட்டவும் தொழில் பயிற்சிகள் ஏற்படுத்தவும், மருத்துவப்பணிகள் ஆற்றவும், ஆன்மீகவழி காட்டவும், அன்புறவூட்டவும், நற்சமூகத்தை உருவாக்கும் அரும் பணி ஆற்றிட புனித பிரான்சீஸ்கன் சகோதர சபையில் இணைந்து இறைபணியால், அன்பு, அறிவு, பண்பு, பாசம், பக்தியினையூட்டும் இறைவாக்கினராக உங்கள் வாழ்வை இச் சபை மூலம் ஆற்ற இணைந்து செயல்பட அழைக்கிறது.

தகமைகள்:– நிறைவான பக்தி, புத்தி, சக்தி.

பெற்றோர் அனுமதியுடன் 8 ஆம் ஆண்டு தேர்வும் பங்குத் தந்தையின் சிபார்சுடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

புனித பிரான்சீஸ்கன் சகோதரசபை
116, விகாரை வீதி,
மாத்தளை A 48/91

செபமாலைத்தாசர் சபை

இளைஞனே நில்!

உன் இதயத்தில் ஒலிக்கும் குரலைக் கேள் ...

''மனிதன் உலகெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்து விடுவானாயின் இவனுக்குக் கிடைக்கும் பயன் என்ன?''

இக்குரல் யாருடையது என்று புரிகிறதா?

இவ்வுலகமெல்லாம் ஆதாயமாக்கினாலோ என்று துடிக்கும் உனக்கு இறைவனின் குரலொலி கேட்குமா?

சற்று நின்று நிதானித்து உன் இதயத்தைக் கவனி!

அங்கே இறைவனின் குரலொலி எழுந்தால்,

உன் ஆன்மாவை மட்டுமல்ல, உன் இனத்தாரின் ஆன்மாக்களை மட்டுமல்ல, உன் நாட்டாரின் ஆன்மாக்களை மட்டுமல்ல இந்த உலகனைத்து மக்களின் ஆன்மாக்களையுமே காக்க, இழப்பிலிருந்து மீட்க உதவலாம்.

இறைவன் உன்னை நேசிக்கிறார். அவரது ஆவலைப் பூர்த்தி செய்ய உடனே எழுது.

(ஆண்டு 10-க்கு மேற்பட்டவர்கள்)

இறை அழைத்தல் ஊக்குநர்
அருள் ஆச்சிரமம்
5, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

"என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

இம்மானுவேல்
யோசவ் ஹென்றி
அவர்களின் நினைவஞ்சலி

தோற்றம்:– 1931–12–25
மறைவு:– 1990–12–20

அன்புருவே, உனைப்பிரிந்து
ஆண்டொன்று
மறைந்தாலும்,
இடைவிடாது
இறைஞ்சுகிறோம்
ஈசன் பதம் சேர்ந்திடவே.

பிரிவில் துயருறும் **மனைவி:–** மனோன்மணி, **மகன்:–** பெனற்

திருப்பலி 19–12–1991, சூராவத்தை, A/52/91

திருப்பலி வாசகம்

திருவருகைக்கால 4-ம் வாரம்

முதல் வாசகம்:– மிக்கேயாஸ் 5: 2–5.
சங்கீதம்:– சங். 79: 1–2, 14–15.
இரண்டாம் வாகம்:– எபிரே 10: 5–10
நற்செய்தி:– லூக். 1: 39–45.

சிந்தனை:– உலகமே எதிர் பார்த்திருந்த மீட்பரை கருவே தாங்கியமரியாள் தன் உறவினள் எலிசபேத் முதிர் வயதில் கருவுற்று இருக்கிறாள் என கேள்விப்பட்டு உதவி செய்ய அவள் இல்லம் செல்கிறாள். ''எவன் உங்களுக்குள் பெரியவனாக விரும்புகிறானோ அவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும்'' என்ற யேசுவின் போதனையை செயலில் காட்டியவள் மரியாள். எனவேதான் பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் என வாழ்த்தப்படுகிறாள். அந்த மரியாள் எமக்கு மாதிரியாக கொடுக்கப்படுகிறாள். மந்தைகள் அச்சமின்றி வாழ மாட்சிமையோடு மேய்க்கும் ஆயனின் வருகைபற்றி முதல் வாசகம் கூறுகிறது. அதே மீட்பர் கருவுற்று பிறக்க விருக்கும் செய்திமரியாள் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கிறிஸ்து பிறப்பு விழாவை அண்மித்துள்ள நாம் கிறிஸ்து எம் உள்ளத்தில் பிறக்க எமது விசுவாசத்தை ஆழப்படுத்த வேண்டும். தாழ்ச்சியுடையோராய் மீட்பரை உலகிற்கு அறிவிக்கும் பாத்திரங்களாக வாழ, இறைவா உமது திருவுளத்தை நிறைவேற்ற வந்துவிட்டோம் என்று துணிந்து சொல்வோம். இறைவார்த்தையின் படி வாழ்வோம்.

திரு இ. ம. ஜெயசீலன்
திருவழிபாட்டு நிலையம், யாழ்ப்பாணம்.

ஒரு உதித்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேல் ஒரு குழந்தை அமைதியாகக் கிடந்தது அதனுடைய தாயும், தகப்பனும், சகோதரியும் அருகில் அமர்ந்திருந்தனர். யார் இவர்கள் ? இவர்கள் தான் டேவிட்டிடம் இடம் கேட்டுவந்தவர்கள் இவர்களுக்குத்தான் டேவிட்டும் திரேசம்மாவும் இடம் கொடுக்க மறுத்தனர்.

டேவிட்டினால் இந்தக் காட்சியை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை 'ஆண்டவர் எண்டு தெரிஞ்சிருந்தா இடம் கொடுத்திருப்பாங்க' என்று அவர் கூறிய வார்த்தைகளும். 'ஆண்டவர் சொன்னார் தானே மற்ற அக்களுக்கு உதவி செய்தா அது தனக்குச் செய்ததெண்டு' என்ற சிறுமியின் வார்த்தைகளும் அவர் உள்ளத்திலே எழுந்து நிற்கின்றன. குற்ற உணர்வு அவரை அழுத்த ''நத்தார் தினத்தில நான் இப்பிடிச் செய்து போட்டேனே'' என்று மனம் வெதும்பி அசைவற்று நிற்கின்றார் டேவிட். உண்மை நத்தாருக்கு உருவம் கொடுக்க மறந்துவிட்ட, மறுத்துவிட்ட டேவிட் இப்போதுதான் உண்மையை உணர்ந்து கொண்டார் போலும் 'இயேசு வந்து பிறந்திருக்கும் இடத்தை அறிந்தாயா இயேசு எந்து நடமாடும் நாளை அறிந்தாயா' என்ற பாடல் வரிகள் அவருடைய காதில் ஒலிப்பது போல் தோன்றியது. இயேசு உங்களைச் சந்திக்க இந்த உருவத்தில் வந்தார். ஆனால் நீங்களோ அவரை அடித்துத் துரத்தி விட்டீர்கள் என்ற குரல் அவர்களின் உள்ளத்திலே வியாபித்து நிற்கின்றது. ''இவங்கள நம்ம வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போவம் திரேசம்மா இப்படிக் கூறிக்கொண்டே அந்தக் குழந்தையை நோக்கி நடக்கின்றாள். அவர்கள் உள்ளத்தில் இப்பொழுதுதான் உண்மை ஒளி உதித்திருக்கின்றது. அந்தக் குடும்பத்தை தங்களுடைய நத்தார் விருந்தாளிகளாக அழைக்க டேவிட்டும் திரேசம்மாள் பின்னே சென்று கொண்டிருக்கின்றார்.

(நினைவுகளின் நிழல்கள்)

முடி மன்னர் மூவர் அடியணிந்த குழந்தை

தாரகை உதித்ததென்று
தரணியில் வேந்தர் மூவர்
மார்கழி ஈர் பத்தைந்தில்
மழை பனிக் குளிரினிலே
சீரிய பெத்தலேம் நாட்டுச்
சேரியில் மரியாள் என்னும்
காரிகை மடியில் துஞ்சும்
கடவுளைக் காணச் சென்றார்.

யோ. சைமன் முரசுமோட்டை, பரந்தன்

பிறநாடுகளில் ஈழத்து அமதிகள்
குருத்துவ வெள்ளிவிழா

அருட்திரு.
யோசவ் சமரக்கோன் அ.ம.தி

அருள்திரு. யோசவ் சமரக் கோன் அவர்கள் இளவாலை யில் பிறந்தவர். கொழும்பிலும் இந்தியாவிலும் குரு-மாண வ ர து உருவாக்கத்திற்கென தனது பணியின் பெரும் பகு தியை அர்ப்பணித்தவர். 1976 இல் இருந்து இந்திய மண்ணில் பணி புரிந்து வரு கிறார். இந்திய அமதிகளுக்கு ஆறுவருட காலம் தலைவராக விளங்கியது குறிப்பிடத்தக்கது.

அருட்திரு.
விக்ரர் ஞானப்பிரகாசம் அ.ம.தி

அருள்திரு. விக்ரர் ஞானப் பிரகாசம் யாழ். பாசையூரில் பிறந்தவர். இலங்கையில் பல பங்குத்தளங்களிலும், அமதி களின் போதக பணியிலும் ஈடுபட்டவர். 1973 இல் பாக் கிஸ்தானுக்கு மறைப்பணி புரிய அனுப்பப்பட்டார். இவர் மூன்று ஆண்டுகள் பாக்கிஸ் தான் அமதிகளுக்கு தலை வராக விளங்கினார்.

இரு அமதிகளும் மார்கழி 21 ஆம் நாள் தமது குருத்துவ வாழ்வில் இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்கிறார்கள். இவர்கள் இருவரதும் சேவையினை நினைந்து அழைப்பின் இறைவனுக்கு நன்றி நவிலும் வேளையில் அவர்களது பணி தொடர்ந்தும் சிறக்க வாழ்த்துகிறோம்.

யாழ் — அமதிகள், உறவினர்.



இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

ஞானஒளி வீசிவரும்....

இங்கிதமே! இளஞ்சுடரே! இன்னமுதே! எங்களது.
பங்கமெல்லாம், போக்கிடவே, பாலகனாய் வந்திடுவீர்.

உண்மைநீதி உணர்ந்துலகம், உய்யவழி செய்திடவே,
அண்ணல்யேசு எம்மிடையே ஆண்டவனாய் வந்திடுவீர்.

ஞானஒளி வீசிவரும் நந்தவனப் பூஞ்சுடரே!
தானவழி சிறந்திருக்க தண்ணளியாய், வந்திடுவீர்.

ஆசை ஆணவங்கள், அறியாமைப் போரிடிகள்,
நாசமாகிப் போயழிய, நம்பரனாய் வந்திடுவீர்.

சிந்தை குளம்பிநாம், சீரழிந்து வாடிடாது.
எந்தை ஏந்தலென எம்மவரில் வந்துதிப்பீர்.

ஞா. அரியமலர்
அமலிவனம், அச்சுவேலி

வாழ்த்து — வணக்கம்

பாதுகாவலன் வாசக நேயர்களுக்கு

நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

இறைமகன் கொணர்ந்த அன்பும்,
அருளும், சமாதானமும் என்றும்
உங்களிடம் நிலை பெற்றிருக்க
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஆசிரியர்